15 04 2026 WEDNESDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

தமிழகத்தில் உரிய அனுமதியின்றி எட்டாயிரம் ரூபாய் மாதிரி கூப்பனைகளை விநியோகம் செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

- பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, இன்று நாகர்கோவிலில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.
- அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக திமுக கூறியுள்ளது.
- தமிழகத்தின் கடன்சுமையை அதிகரித்தது தான் திமுக அரசின் சாதனை என்று நாம் தமிழர் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.
- மக்களை ஏமாற்றுவதையே வாழ்நாள் கடமையாக கொண்டு திமுக செயல்படுவதாக த.வெ.க குறை கூறியுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் வாக்குச்சாவடி சீட்டு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்காளர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் அனைத்து விவரங்களும் இதில் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடி சீட்டுடன் வாக்காளர்களுக்கான கையேடும் வழங்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வாக்களிக்கும் முறை குறித்தும், வாக்குச்சாவடிகளில் உள்ள கூட்டத்தின் நிலை குறித்து எவ்வாறு அறிந்து கொள்வது போன்ற விவரங்கள் இந்த கையேட்டில் இடம்பெற்றுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை திறன் குறைபாடு கொண்ட மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக Braille வாக்குச்சாவடி சீட்டுகளும் வழங்கப்படுவதாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடி சீட்டுடன், வாக்காளர் அடையாள அட்டை அல்லது தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட 12 மாற்று ஆவணங்களை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தேர்தல் ஆணையத்தின் அனுமதியின்றி 8 ஆயிரம் ரூபாய் மாதிரி கூப்பன் விநியோகம் செய்யப்பட்டால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் எச்சரித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் விளம்பரத்திற்காக பெறப்படும் காணொலி ஒப்புதலை காட்டி, இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும் கூறினார்.

இவ்வாறு விநியோகம் செய்யப்படும் கூப்பன்களை பறிமுதல் செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

*இந்நிலையில், தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் தபால் வாக்கு செலுத்துவது இன்று தொடங்கியது.*

*இதேபோல் வரும் 19ஆம் தேதியும் தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் தபால் வாக்குகளை செலுத்தலாம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*இதற்கிடையே, தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.*

*பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, நாகர்கோவிலில் வாகனத்தில் சென்றபடி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.*

*அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியும் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் திமுக இளைஞரணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின், தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.*

*கடந்த ஐந்தாண்டுகளாக மக்கள் நலனுக்காக திமுக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக கூறி, அவற்றை பட்டியலிட்டார்.*

*மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*திமுக அரசு நிறைவேற்றிய திட்டங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.*

*தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றியுள்ளதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.*

*நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான், பட்டுக்கோட்டையில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.*

*தமிழகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றாமல், கடன் சுமையை அதிகரித்தது தான் திமுக அரசின் சாதனை என்று அவர் குற்றம் சாட்டினார்.*

*ஊழலற்ற நிர்வாகத்தை உறுதி செய்ய நாம் தமிழர் கட்சிக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் திரு. சீமான் கேட்டுக் கொண்டார். திமுகவின் 8 ஆயிரம் ரூபாய் கூப்பன் நாடகத்தால், திருச்சியைச் சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நெஞ்சை பதற வைப்பதாக த.வெ.க தலைவர் திரு. விஜய் கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மக்களை ஏமாற்றுவதையே வாழ்நாள் கடமையாக கொண்டு திமுக செயல்படுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.*

*இப்பிரச்சினையில் தேர்தல் ஆணையம் உடனடியாக தலையிட்டு, அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. விஜய் வலியுறுத்தியுள்ளார்.*

*இதனைத் தொடர்ந்து, சென்னையின் பல்வேறு பகுதிகளில் திரு. விஜய், தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.*

*>>>>><<<<<*

*இனி தேர்தல் களம்...*

*(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)*

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது நாகை மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 3 mins.)*

*>>>>><<<<<*

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(வாய்ஸ் பைட் - துரை 30 செகண்ட்ஸ்)

*>>>>><<<<<*

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.

*>>>>><<<<<*

நாமக்கல்லில் பெண்களால் இயக்கப்படும் ஆட்டோக்கள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியை, ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி இன்று தொடங்கி வைத்தார்.

*>>>>><<<<<*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி முகாமினை ஆட்சியர் திருமதி. சினேகா இன்று ஆய்வு செய்தார்.

*>>>>><<<<<*

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய Heyball சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Amee Kamani வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

*>>>>><<<<<*

ஸ்குவாஷ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் Abhay Singh 22-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

*>>>>><<<<<*

Havirov சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sutirtha Mukherjee இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-9, 11-7, 11-5 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் Lee Dauen-ஐ வென்றார்.

*>>>>>END<<<<<*